### உலக முதலீட்டாளர் மாநாடு 2024! முதலமைச்சரின் தொலைநோக்குத் தலைமையில்

# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் அடுத்த கட்டப் பாய்ச்சல்!

## இரண்டாம் நாள் நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்புரை!

சென்னை.ஜன.10 -

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பேசியதாவது:

நமது திராவிட நாயகன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், தமிழ்நாடு கடந்த இரண்டரை ஆண்டுகளில் மிகப்பெரிய மாற்றத்தை சந்தித்துள்ளது.



ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற தனது லட்சிய கனவை அடைவதற்கு, மாநில பொருளாதாரத்தின் வேர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அறிந்திருந்தார். மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு புதிய வேலைகளை உருவாக்குவது இந்த இலக்குக்கு முக்கியமானது என்பதிலும் அவர் தெளிவாக இருந்தார். எனவே தமிழ்நாடு முழுவதும் பரவலான வளர்ச்சியே அவரது இலக்காக மாறியது.

தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த.மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த அடித்தளம் அமைக்கத் தொடங்கியது.

நான் முதல்வன் மற்றும் புதுமைப் பெண் போன்ற திட்டங்களின் மூலம், மாண்புமிகு முதலமைச்சர் நமது இளம் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துவதை உறுதி செய்தார்

தொழில் துறை நமது முதலமைச்சரின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது. அவர் பதவியேற்ற பிறகு அந்த துறைக்காக எடுத்துள்ள பல நடவடிக்கைகள், தமிழ்நாட்டின் முதலீடுகளுக்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு சான்றாகும். இந்த புதிய முதலீடுகள் இன்று தமிழ்நாட்டுக்கு லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது.

கடந்த இரண்டு நாட்கள் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான அடுத்த பெரிய பாய்ச்சலுக்கு அடித்தளத்தை அமைத்துள்ளது.

மின்வாகனங்கள், மின் கடத்திகள், செயற்கை நுண்ணறிவு, மேம்பட்ட உற்பத்தி, குவாண்ட்டம் கம்ப்யூட்டிங், பேட்டரி செல் தயாரிப்பு போன்ற துறைகளையும், தோல் அல்லாத பாதணிகள் போன்ற பொது மக்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருவதையும் நாம் பார்க்கிறோம்.

இதை நிறைவேற்ற, மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாக நமது தொழில் துறையைச் சார்ந்தவர்களை உலகின் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வருகிறார், மேலும், முதலீடுகளை ஈர்ப்பதற்காக அவர் அண்மையில் ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்குச் சென்றார். அதன் விளைவினை இன்று நீங்கள் காண்கிறீர்கள். உலகெங்கிலும் உள்ள நாடுகளில் இருந்து இவ்வளவு பெரிய அளவிலான நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

இந்த தொழில் முதலீட்டாளர் மாநாட்டிற்குப் பிறகு, அடுத்த சில நாட்களில் தொழில் துறையினர் டாவோஸுக்குச் செல்ல இருக்கின்றனர். அதன் பின்னர் ஜனவரி 28 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் எங்களுடன் ஸ்பெயின் நாட்டிற்கு வருகை தர இருக்கிறார். மேலும், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கான திட்டங்களும் உள்ளன. நிறைவாக, அமெரிக்காவுக்குப் பயணிக்க உள்ளார்.

முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த, இந்த இரண்டு நாட்களும் முதலீட்டு எண்ணிக்கையைப் பற்றியது மட்டுமல்ல, தமிழ்நாட்டின் துடிப்பான, திறமையான இளம் பணியாளர்களுக்கு குறிப்பாக நமது பெண்களுக்கு மாநிலம் முழுவதும் வழங்கப்படக்கூடிய உயர்தர வேலைகள் தொடர்பானது.

எனவே, இந்த இரண்டு அற்புதமான நாட்களையும் முதலீட்டாளர்களுக்கும், தமிழ்நாட்டின் சிறுகுறு தொழில் நிறுவனத்தாருக்கும் மிகப்பெரிய வெற்றியாக மாற்றிய உங்கள் அனைவருக்கும் நன்றி. மேலும் இந்த அமர்வுகளில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான இளம் மனங்களுக்கு நன்றி. இது தொழில்முனைவோரின் உண்மையான கொண்டாட்டமாக அமைந்தது.

இதுபோன்ற உலக அளவிலான மாபெரும் நிகழ்வை நடத்த தொழில் துறைக்கு வாய்ப்பளித்ததற்காக நமது முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரவேற்பு உரை யாற்றினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (08.01.2024), சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனையில், மகப்பேறு செவிலியர்கள் பராமரிக்கும் பேறுகாலப் பிரிவினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.மீனா, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அரவிந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையம் அருகே 62 ஆவது வட்டம் அருணாச்சலம் தெருவில் தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். அருகில் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சிற்றரசு, பகுதி செயலாளர் மதன்மோகன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.





